... நூலகம்
...


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 97 பிரசோற்பத்தி மாசி 20 ( 03. 03. 1992 ) செவ்வாய்


## இரண்டு மாதங்களில் 280பேர் ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ் பொது மருத்துவ மனையில் இவ்வாண்டின் கடந்த இரு மாதங்களில் 280 பேர் வரையில் மரணமாகியுள்ளனர் என வைத்தியசாலை பதிவேட்டிலிருந்து தெரியவந்துள்ளது, மரணமானவர்களில் வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல், செங்கமாரி போன்ற நோய்களுக்கு பலியானவர்களே அதிகம் எனவும் அறியவந்துள்ளது. இதைத்தவிர வாகன விபத்தில் சிக்கி 12 பேரும், இராணுவ நடவடிக்கைகளினால் 5பேரும் தற்கொலைமுயற்சியில் 25பேரும் சிகிச்சையின் பின் மரணமாகியுள்ளனர் பிறந்த உடன் மரணமான சிசுக்களின் தொகை 15என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும் — 04-ம் பக்கம் பார்க்க

★ லண்டன் தமிழர் மாநாட்டில் தீர்மானம்

# உள்நாட்டுப் போரை நிறுத்த அனைத்துலக தலையீடு அவசியம்

## வெளி உதவியை எதிர்பார்த்து தமிழர் காத்திருக்கக் கூடாது எனவும் வற்புறுத்து

"இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுப் போரினால் ஏற்படும் அழிவுகளையும் சேதங்களையும் பார்க்கும் போது இப்பிரச்சினையில் அனைத்துலக நாடுகளும், ஐ. நாவும் தலையிட வேண்டும் என்பதை எமக்கு வற்புறுத்துவதாக இருக்கிறது" இவ்வாறு போர் தடுப்பு மற்றும் மனித உரிமைக் காப்பகத்தின் இணைப்பாளரான எட்வர்டோ பெலிரோ தெரிவித்துள்ளார்

கடந்தமாதம் 15 ஆம்திகதி லண்டனில் நடைபெற்ற அனைத்துலக தமிழர்மாநாட்டில் கலந்து கொண்டுபேசுகையிலேயே அவர் இக்கருத்தை வலியுறுத்தினார்.

இப்பிரச்சினை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வரப்படவேண்டும் என வற்புறுத்திய அவர் இதேவேளை போரில் பொதுமக்களை கொல்ல ஸ்ரீலங்கா விமானப் படை உபயோகிப்பதாகவும் குற்றஞ்சாட்டினார்,

விடுதலைப்புலிகள் தமது தடுப்பு முகாம்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் செல்ல அனுமதிக்க வேண்டும் எனவும் அவர்வேண்கோள் விடுத்தார்.

## மூன்றாம் உலக நாடுகளெனின் மேற்குலக நாடுகள் அக்கறையில்லை

இக்கருத்தரங்கில் உரையாற்றிய அகதிகள் அமைப்பைச் சேர்ந்த பிரமுகர் "ஐரோப்பிய நாடுகளல்லாத வேறு எங்கு உள்நாட்டுப் பிரச்சினைகள் காணப்பட்டாலும் அதைத் தீர்ப்பதில் உலக நாடுகள் அக்கறை செலுத்துவதில்லை."

இதிலும் மூன்றாம் உலக நாடொன்றில் சிவில் யுத்தம் நடைபெறுகிறதெனில் அந்த நாட்டினால் தமக்கு ஏதும் பலன் இல்லை எனத் தெரிந்து — 04 ஆம் பக்கம் பார்க்க

## பாலஸ்தீனியர் தனியாட்சி கோருவதாக உள்ளது - இஸ்ரேல்

மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் வாஷிங்டனில் தொடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது அரபு - இஸ்ரேல் தரப்பினர் பேசுவதற்கே எதுவும் இல்லை என்றவாறு விரக்தி நிலையில் இருக்கிறார்கள் என செய்திகள் தெரிவிக்கின்றன,

ஒவ்வொரு தரப்பினரும் தத்தம் நிலைப்பாடுகளிலிருந்து விட்டுக் கொடுக்காமல் இருப்பதனாலேயே பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படவில்லை எனக் கூறப்படுகிறது இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதி —04 ஆம் பக்கம் பார்க்க

## தவசியாகுளம் பகுதியில் இரவில் கடும் மோதல்

வவுனியா தவசியாகுளம் பகுதியில் தங்கியுள்ள படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினமிரவு கடும் மோதல்கள் நடைபெற்றன

இம்மோதல்கள நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது ஹெலிக்கப்டர் ஒன்று அங்கு தரையிறங்கிச்சென்றது.

இதைத் தொடர்ந்து படையினர் பரவலாக ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இம்மோதலில் புலிப் போராளி ஒருவர் வீரச்சாவு எய்தினார். 07

## பீரங்கித் தாக்குதல்

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் பூநகரி - கல்முனை இராணுவத்தினர் அரியாலை கிழக்கு, கேரதீவு கடற்கரையோரப் பகுதியைக் குறிவைத்து பரா வெளிச்சம் பாய்ச்சி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர், இடையிடையே கலியர் தாக்குதலும் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டது. 47, 07

## பருத்தித்துறை இறங்கு துறை திருத்தவேலை அடுத்தவாரம்?

பருத்தித்துறை துறைமுகத்தின் இறங்கு துறையின் சேதமாக்கப்பட்ட பகுதியின் திருத்த வேலைகள் அடுத்த வாரத்திலிருந்து ஆரம்பமாகும் என யாழ் அரசாங்க அதிபர் கா: மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

இந்த இறங்கு துறையின் திருத்த வேலைகளுக்கென கொழும்பில் இருந்து கப்பலில் சீமெந்து ஏற்கனவே பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்திருப்பதாகவும் எனினும் திருத்தவேலைகள் தற்போது தாமதப்படுவதாகவும் அடுத்த வார முற்பகுதியில் திருத்த வேலைகள் அநேகமாக ஆரம்பமாகும் எனவும் அவர் கூறினார். (47)

## ஷெல் வீச்சு தொடர்கிறது

வவுனியாப் பகுதியில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து நேற்று முன்தினமிரவு குடியிருப்புக்களை நோக்கிய ஷெல் தாக்குதலை இராணுவத்தினர் மேற் —06 ஆம் பக்கம் பார்க்க

ஜனாதிபதி சொல்கிறார்:

## வட, கிழக்குப் பிரச்சினை வருட முடிவுக்குள் தீரும்

இவ்வாண்டு முடிவுக்குள் வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படும் எனத் தாம் நம்புவதாக ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்துள்ளார்

ஜாதிக சேவக சங்கமய, அரசாங்க சேவைத் தொழிற் சங்க சம்மேளனம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களின் கூட்டத்திலேயே ஜனாதிபதி முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு பேசுகையில் ஜனநாயக மீட்புக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களின் குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்பில் முன்னுரிமை —04 ஆம் பக்கம் பார்க்க

அஸாம் முதல்வர் எச்சரிக்கை

## பேச்சுகள் தோல்வியுற்றால் இராணுவ நடவடிக்கை

உல்பா தீவிரவாதிகளுடன் அஸாம் மாநில அரசு இப்போது நடத்திவரும் பேச்சுகள் தோல்வியடைந்தால் மீண்டும் மாநிலத்தில் இந்திய இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகும் என மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை நடத்த முன்வருவதாக உல்பா தீவிரவாதிகள் கூறியதையடுத்து அஸாமில் இராணுவ நடவடிக்கைநிறுத்தப்பட்டுகடந்த இரண்டு மாதங்களாக உல்பாவிற்கும் அஸாம் மாநில அரசிற்கும் இடையில் பேச்சு நடைபெற்று வருவது தெரிந்ததே

உலகக் கோப்பை கிரிக்கெட்

## தெ. ஆபிரிக்காவை ஸ்ரீலங்கா நேற்றுத் தோற்கடித்தது

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் நியூசிலாந்து வெலிங்டனில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை ஸ்ரீலங்கா 3 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.

தென்னாபிரிக்கா 47 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது தொடர்ந்து ஆடிய ஸ்ரீலங்கா 49 5 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்ரீலங்கா அணி தனது ஆரம்ப ஆட்டத்தில் மோசமான நிலையிலேயே இருந்தது முதல் 10 ஓவர்களில் 3விக்கெட்டுகளை இழந்து 35 ஓட்டங்களையே அது பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. 16

பூர்வாங்க கணிப்பீடு விவரம்

## துடுப்பாட்டக்காரர் வரிசை ரணதுங்க முன்னணியில்

அவுஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலும் தற்போது நடைபெற்றுவரும் 5 ஆவது உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் இதுவரையில் திறமையான ஆட்டக்காரர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

துடுப்பெடுத்தாட்டத்தைப் பொறுத்த வரையில் இதுவரை கணிக்கப்பட்ட விவரங்களின் படி ஸ்ரீலங்கா அணித் தலைவர் அர்ஜுனா ரணதுங்க சிறந்த துடுப்பாட்டக் காரராகத் தெரிவு செய்யப்பட் —04 ஆம் பக்கம் பார்க்க

## சிப்பாய்களின் சடலங்கள் மீட்பு

வாழைச்சேனையில் கடந்த வாரம் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் காணாமற்போன 19 சிப்பாய்களின் சடலங்கள் அழுகிய நிலையில் —04ஆம் பக்கம் பார்க்க

# காய்கறிப் பொருள்கள் தேங்குவது, பழுதடைவது ஏன்?

## தமிழீழ ஆய்வு நிறுவனம் விளக்கம்

திட்டமிட்ட ஆலோசனையின்மையே இன்று பல காய்கறிப் பொருள்கள் சந்தைகளில் தேங்குவதற்கும் பழுதடைவதற்கும் காரணமென தமிழீழ ஆய்வு நிறுவனம் தெரிவித்துளளது.

"இன்று மக்களின் தேவையையும் சேமிப்பையும் கருத்தில் கொண்டே பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டும். இதை விடுத்து அதிகலாபம் பெறுவதும் அதிக உற்பத்தியென்னும் பெயரில் பல நாள்கள் சேமிக்க முடியாத தக்காளி போன்ற நீர்பபிடிப்புள்ள பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதால் நாட்டுக்கோ உற்பத்தியாளர்களுக்கோ எவ்வித பிரயோசனமும் இல்லை, மாறாக உற்பத்தியாளர்களுக்குப் பெரும் நட்டத்தையே ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை நல்ல முறையில் மாற்றியமைத்து நாட்டுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் நல் வழிகளைக் காட்டவே தமிழீழமெங்கும் தமிழீழ ஆய்வு நிறுவன உப உற்பத்திக்குழுக்கள் இயங்குகின்றன, இவர்களின் திட்டமிட்ட ஆலோசனைகளைப் பெற்று உற்பத்தியாளர்கள் இயங்கினால் உற்பத்திப் பொருள்கள் சந்தைகளில் தேங்காதநிலையையும் சேதமாகாதநிலையையும் உருவாக்க முடியும்" என்றும் தமிழீழ ஆய்வு நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது (9)

## உண்மைபற்றி இவர்

தொடர்பு சாதனங்கள் உண்மையான செய்திகளை வெளியிடவேண்டும், குறிப்பாக அரசசார்புள்ள தொடர்புசாதனங்கள் உண்மையானவற்றை வெளியிடுவதில்லை.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கூறினார்.

வெரித்தாஸ், பி. பி. ஸி, போன்று சரியான செய்திகளை நமது நாட்டுப் பத்திரிகைகள் வெளியிட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார், அரசாங்கம் தொலைக்காட்சி, வானொலி மூலம் தனது பிரசார வேலைகளை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்,

## இன்டர்போல் உதவி நாடப்படுமாம்

விடுதலைப்புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரனையும், பொட்டம் மானையும் பிடிக்க 'இன்டர்போலின்' உதவி நாடப்படும் என்று இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது என்று கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச்செய்தி வெளியிட்டுள்ளது,

## ஏற்றுமதி முயற்சி

பனம்பொருள் உணவுப் பண்டங்களான பனாட்டு, புழுக்கொடியல் போன்றவற்றை மீண்டும் கொழும்பிற்கு ஏற்றச் சில வர்த்தகர்களால் முயற்சிகள்மேற்கொள்ளப்படுவது குறித்து அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

போர்க்கால சூழ்நிலையில் பொருளாதாரத் தடைகளினால் மக்கள் வாடும் இந்நிலையிலும் எமது தேவைக்காகப் பலகாலம் வைக்கக் கூடிய பேற்படி பனம் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வது அவசியமா எனப் பொதுமக்கள் வினா எழுப்புகின்றனர். (9)

# சாராயம், சிகரெட், சிமெந்து

## குளிர்பான விலைகள் திடீர் அதிகரிப்பு

சாராயம், சிகரெட், சிமெந்து குளிர்பானவிலைகள் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளன

தேயிலை, றபர் விலை வீழ்ச்சியால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்யவே நிதியமைச்சு இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவை உட்பட பலபொருள்களின் விலைகள் கடந்த வெள்ளிக்கிழமை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

சாராயத்தின் விலை போத்தல் ஒன்றிற்கு ஐந்து ரூபாவாலும், சிகரெட் ஒன்றின் விலை பத்து சதத்தினாலும் சிமெந்து பாக்கெட் ஒன்றின் விலை ஐந்து ரூபாவினாலும் சோடாபோன்ற குளிர்பானங்களின் விலை ஒரு ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை டீசல் வாகனங்களின் இறக்குமதி மீதான வழக்கமான சுங்கத்தீர்வைக்கும் புறம்பாக 50 சதவீத உற்பத்திவரியும் விதிக்கப்படுகின்றது.

## ஸ்ரீலங்காவில் முதலீடு பற்றி சென்னையில் கருத்தரங்கு

ஸ்ரீலங்காவில் கைத்தொழில் முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு சென்னையிலுள்ள பிரதித்தூதுவராலயத்துடன் இணைந்து பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு கருத்தரங்கு ஒன்றினை நடாத்தியுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி இக் கருத்தரங்கு சென்னையில் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## வடமராட்சிக் கடல் பிராந்தியத்தில் பீரங்கி தாக்குதல்

நேற்று அதிகாலை வடமராட்சிக் கடலில் ஸ்ரீலங்கா கடற்படையினர் மீனவர்களையும், குடிமனைகளையும் நோக்கிப் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்

வடமராட்சி பாக்கு நீரிணைக் கடலில் தரித்துள்ள ஸ்ரீலங்கா கடற்படையினர் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகினை நோக்கியும் மக்கள் குடியிருப்புகளையும் நோக்கியுமே பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொண்டனர். (09)

## சவூதி மன்னர் அறிவிப்பு

# நெடுநோக்கிலான அரசியல் சீர்திருத்தங்கள் புரிவேன்

சவூதி அரேபியாவில் முதலாவதாக எழுத்து மூலம் வரையப்பட்டதான அரசியல் சாசனத்தை மன்னர் பிரகடனம் செய்துள்ளார்,

நாட்டு விவகாரங்களைக் கவனிக்கவென அறுபது உறுப்பினர் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்றையமைக்கவும் இச்சாசனம் வழிகோலுகிறது,

பொருளாதார மேம்பாடும் மற்றும் வெளி விவகாரங்களிலும் இக்குழு மன்னருக்கு ஆலோசனை கூறும்.

மன்னர் நாட்டு மக்களுக்கு வானொலி, தொலைக்காட்சி மூலமாக விடுத்த செய்தி ஒன்றில் நெடுநோக்கு அரசியல் சீர் திருத்தங்களைத் தான் செயற்படுத்தப்போவதாக உறுதியளித்துள்ளார்.

## இன்று மூடப்படும்

யாழ் நகரில் இன்று வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ராஜ்ய உறவு ஒப்பந்தம்

இந்தியாவும், அசர்பைஜானும் தமக்கிடையே ராஜ்யத்துறையிலான பிணைப்பை ஏற்படுத்திக்கொள்வதற்கு உடன்பட்டுள்ளன,

இதற்கான ஒப்பந்தம் ஒன்றுகையெழுத்தாகியுள்ளது என்றுதெரிவிக்கப்பட்டது.

அசர்பைஜான் இந்தியாவுக்கு எண்ணெய் வள ஏற்றுமதி செய்வதற்கும் இணங்கியுள்ளது.

# விளையாட்டு மைதானம்

## யாழ். இந்து வென்றது

யாழ்.இந்துக் கல்லூரிக்கும் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் கடந்தவார இறுதியில் இடம்பெற்ற கிரிக்கெட் பந்தயத்தில் இந்துக்கல்லூரி 7 விக்கற்றுகளால் வெற்றி பெற்றது.

இது இந்துக்கல்லூரி பெற்ற இரண்டாவது வெற்றி என்பது குறிப்பிடத்தக்கது

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்பற்றிக்ஸ் அணி, எரிக் நிமலன் பெற்ற 26 ஓட்டங்கள் உட்பட சகல விக்கற்றுகள் இழப்பிற்கு 72 ஓட்டங்களை எடுத்தது.

இந்துக் கல்லூரி அதன் துடுப்பாட்டத்தில் 124 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தது. இதில் றஜீவன் பெற்றுக் கொடுத்த ஓட்டங்கள் 25.

சென் பற்றிக்ஸ் அணி அதன் இரண்டாவது இனிங்ஸில் 115 ஓட்டங்களைப் பெற்றது. இந்துக்கல்லூரி வெற்றி இலக்கான 64 ஓட்டங்களை 3 விக்கற்றுகளைப் பறிகொடுத்து மிக இலகுவாகப் பெற்றது. வரதன் ஆட்டம் இழக்காமல் 36 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

## வெற்றி தோல்வி இல்லை

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கிரான்லிக் கல்லூரிக்கும யாழ் மத்திய கல்லூரிக்குமிடையில் இடம்பெற்ற கிரிக்கெட் பந்தயத்தில் முதல் இனிங்ஸில் 52 ஓட்டங்களை மத்திய கல்லூரி எடுத்த ஓட்டங்களிலும் பார்க்கக் கூடுதலாகப் பெற்றிருந்தும் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

யாழ்.மத்திய கல்லூரி முதல் இனிங்ஸ் துடுப்பாட்டத்தில் 107 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தது, றமேஷ் 24, வித்தியாதரன் 21, விஜயகுமார் ஆட்டம் இழக்காமல் 16 ஓட்டங்களையும் பெற்றனர்

பந்து வீச்சில் பிரதீபன் 3:23, நாதன் 2:29, ராஜ்குமார் 2:17 என்ற கணக்கில் விக்கற்றுகளை வீழ்த்தினர்.

மத்திய கல்லூரி இரண்டாவது இனிங்ஸில் சுரேஸ் 35, ரகுநாதன் 31, அருண் 25 ஓட்டங்கள் உட்பட 6 விக்கற்றுகள் இழப்பிற்கு 150 ஓட்டங்களைப் பெற்றது.

கிரான்லிக் கல்லூரி அதன் முதல் இனிங்ஸில் பிரதீபன் திறம்பட ஆடிப்பெற்ற 80 ஓட்டங்களுடன் 159 ஓட்டங்களை எடுத்தது இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கற்றுகள் இழப்பிற்கு 30 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஆட்டம் நிறைவுபெற்றது. (16)

# வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர் இலகுவில் பயணம் செய்ய விசேட ஏற்பாடு

வவுனியா- வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியில் முதலாவதாக எதிர்வரும் ஏழாந் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள கணித, விஞ்ஞான பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ் கிளிநொச்சிப் பிரதேச மாணவர்கள் இலகுவில் வவுனியாவுக்குச் செல்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி சு, மோகனதாஸ் தெரிவித்தார்.

இப் பயிற்சி நெறிக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் பற்றிய ஆலோசனைக் கூட்டமொன்று நேற்றுக்காலை யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தெரிவாகியுள்ள ஒருபகுதி மாணவர்களுடன் யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் க, பரமேஸ்வரன் மற்றும் வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரியின் நிதி உதவியாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கணித விஞ்ஞான பயிற்சிக்குத் தெரிவாகியுள்ளோர் எதிர்வரும் 7ஆம் திகதி வவுனியாவில் பயிற்சிக்குச் செல்லும் போது கல்விச்சான்றிதழ்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் முழுநீள மூலப்பிரதி, பாஸ்போட் அளவிலான எட்டுப் புகைப்படப் பிரதிகள், பாடசாலை விடுகைப் பத்திரம், மற்றும் 100 ரூபா பதிவுக்கட்டணம் என்பவற்றையும் கொண்டு செல்லுதல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்

வவுனியாவில் இந்த முதற் தொகுதி மாணவர்களுக்கு வேண்டிய வசதிகளைச்செய்து கொடுப்பதுபற்றியும் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நேற்றைய கூட்டத்திற்குச் சமூகமளிக்கமுடியாது போன, கணித, விஞ்ஞான பயிற்சி நெறிக்குத் தெரிவாகியுள்ள மாணவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் பதிவாளரைச் சந்தித்து வவுனியாவிற்கு இலகுவில் பயணம் செய்வதற்குத் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனக் கலாநிதி மோகனதாஸ் முரசொலிக்குத் தெரிவித்தார். (04)

## வவுனியா ரயில் நிலையத்தில் ஒலிபெருக்கி வசதி

வவுனியா ரயில் நிலையத்தில் ஒலிபெருக்கி வசதிசெய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்திலிருந்து ரயில்கள் புறப்படுவது, வந்து சேர்வது பற்றிய விவரங்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படுவதுடன் பயணிகளுக்கு அவ்வப்போது வேண்டிய அறிவுறுத்தல்களும் ஒலிபரப்பப்படுகின்றன,

வடக்கில் முன்னர் இருந்த காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் ரயில் நிலையங்களுக்கு அடுத்து ஒலிபெருக்கி வசதி பெற்ற ரயில் நிலையம் வவுனியா ரயில் நிலையமாகும். (10)

## தடை

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் மாணவர்கள் கண்டபடி நடமாடுவதற்கு கல்லூரி நிர்வாகத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது,

சனி, ஞாயிறு நாள்களில் மாலை நேரங்களில் படிப்புக்குரிய மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (47)

யாழ்ப்பாணம்

# வவுனியா விமானத்தளம்; மேலும் காணி சுவிகரிப்பு!

வவுனியா விமானத் தளத்தை விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீ லங்காவிலேயே இரண்டாவது மிகப்பெரிய விமானத்தளமாக வவுனியா - தச்சன்குளம் விமானத்தளம் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்கெனச் சுற்றாடலிலுள்ள பல காணிகள் சுவிகரிக்கப்படவுள்ளதாகவும் வவுனியாவில் நடைபெற்ற இடம்பெயர் சேவையின் அதிகாரிகள் தெரிவித்ததாகக் கொழும்புச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

இது இவ்வாறு இருக்க ஏற்கனவே விமானத்தள விஸ்தரிப்புக்கென தமிழரின் பல வீடுகளும், பல ஏக்கர் காணிகளும் சுவிகரிக்கப்பட்டிருந்தன. தற்போது விமானத்தளத்தின் ஒரு எல்லை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

புதிதாகக்காணி சுவிகரிக்கப்படுமிடத்து ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் கல்வி பயிலும் மேற்படி வித்தியாலயத்திற்கு ஊறு நேரலாம் என்றும் மேலும் பல தமிழர்கள் இடம்பெயர வேண்டிய அவல நிலை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## மின்சாரம்; 50 யூனிட்வரை அதிகரிப்பில்லை என அறிவிப்பு

மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் 50 யூனிட் வரை கட்டண அதிகரிப்பு இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

12 முதல் 25 வீதம் வரை மின்கட்டணத்தை மின்சார சபை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வறட்சி காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மின்கட்டணம் அதிகரிக்கப்படுகின்ற போதிலும் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவித்தால் அதிகரிக்கப்பட்ட மின்கட்டணத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் அல்லது கட்டணத்தைக் குறைத்துக் கொள்ளலாம் என்றும் அனல் மின்சாரத்திற்குக் கூடுதலான செலவு ஏற்படுவதைச் சமாளிக்க எடுக்கப்பட்ட தற்காலிக நடவடிக்கையே என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்னமும் இல்லை

கைதடி அரசினர் ஆயுர்வேத மருத்துவமனை ஊழியர்களுக்கு அரசினால் அறிவிக்கப்பட்ட இரு வருட கஷ்ட நிவாரணப்படி இன்னமும் வழங்கப்படவில்லையென்று ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (14,

## ★ விமானக் குண்டுவெடிப்புச் சந்தேக நபர்களை விசாரணைக்கு நடுநிலை நாட்டிடம் ஒப்படைக்க லிபியா இணக்கம்

சந்தேகத்துக்குரிய லிபிய நாட்டவர் இருவரை லிபியா ஐ.நா.விடம் ஒப்படைக்க வேண்டும் என ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் ஆந்திரே கொஹிரே யோசனை தெரிவித்துள்ளார்.

1988 ஆம் வருடம் விமானம் ஒன்று குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட செயலுக்குப் பிரஸ்தாப லிபிய நாட்டவர் இருவருமே காரணம் என்று அமெரிக்காவும், பிரிட்டனும் குற்றஞ் சுமத்தியுள்ளன.

லிபிய வெளியுறவுத்துறை அமைச்சர் இப்ராஹிம் அல்-பசாரியை முன்னறிவிப்பு ஏதுமின்றி கெய்ரோவில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்திய ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடையே பேசும்போது ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தை ஏற்றுச் செயற்பட்டு லிபியா ஒத்துழைப்பது தான் இந்த நெருக்கடிக்கு சாலச் சிறந்த தீர்வாகும் என்று கூறினார்.

இதனிடையே, பிரஸ்தாப இரு சந்தேக நபர்களையும் விசாரணைக்கென நடுநிலை நாடு ஒன்றிடம் ஒப்படைப்பதற்குத் தமது நாடு தயாராக இருப்பதாக லிபிய வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சரைச் சந்தித்துப் பேசிய பின் அவர் இதனைக் கெய்ரோவில் அறிவித்தார்.

## முதலாவது தனியார்துறை தொலைக்காட்சி, வானொலி சேவை

ஸ்ரீலங்காவின் முதலாவது தனியார் துறை தொலைக்காட்சி மற்றும் வானொலி சேவை நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்காவில் 13 வருடங்களுக்கு முன்னர் முதன் முதலாகத் தொலைக்காட்சியை அறிமுகப்படுத்திய ஷான் விக்கிரமசிங்க (46 வயது) ஸ்ரீலங்காவின் முதலாவது தனியார் தொலைக்காட்சி மற்றும் வானொலிசேவை நடத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

## தங்க பிஸ்கட் கடத்தல் முயற்சி முறியடிப்பு தகவலாளருக்கு 67 லட்சம் ரூபா வெகுமதியாகக் கிடைத்தது

தங்க பிஸ்கட்டுகள் கடத்தி வருவதுபற்றிய சரியான தகவல் ஒன்றினைத் தெரிவித்த ஒருவருக்கு இலங்கை சுங்கத் திணைக்களம் 67 இலட்சம் ரூபாவை வெகுமதியாக வழங்கியது.

இவர் கொடுத்த தகவலையடுத்து சில கோடி ரூபா பெறுமதியான தங்கம் கைப்பற்றப்பட்டது.

கடத்தல் செய்தவர் தண்டனைக்குள்ளானார்.

இதனால் சுங்கத்திணைக்களத்திற்குக் கிடைத்த நிதியின் ஒரு பகுதியாகவே தகவல் கொடுத்தவருக்கு மேற்படி தொகை வழங்கப்பட்டது.

ஆயினும் இவரது பெயர் வெளியிடப்படவில்லை.

## அமைதியை ஏற்படுத்தவே இராணுவ நடவடிக்கையாம்

''அமைதியை ஏற்படுத்தவே இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது'' என்று பிரதமரும், நிதியமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்க கூறியுள்ளார்

வவுனியாவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நடமாடும் அமைச்சர் சேவையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமாதானத் தீர்வு ஏற்படும் என பாதுகாப்புச் செயலாளர் தம்பிக்கை வெளியிட்டுள்ளதாகவும் கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## உதைபந்தாட்டம்

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு 2 நாள்கள் நடைபெறவுள்ள விலகல் முறையிலான 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னதாக சங்கப் பணிமனையில் விண்ணப்பப் பணமாக 100 ரூபாவை செலுத்துவதன் மூலம் போட்டிக்கு தயாராகுமாறு சங்கத் தலைவர் செ. உருத்திரா கேட்டுள்ளார். (04)

---

அரசியல் அவதானிப்புகள்:

# தமிழீழ அகதிகளை தமிழகம் திருப்பியனுப்புவது தமிழக வரலாற்றில் ஓர் வடு

- எஸ். ஜி. எம்.

இந்தியச் சமஷ்டி அமைப்பின் ஓர் மாநிலமான தமிழ் நாட்டை தமது மத்திய மாதா பூமி என உலகெங்கிலும் பரந்துபட்டு வாழும் தமிழ் மக்கள் எல்லோரும் 1991 நடுப்பகுதி வரை கருதி வந்தனர்,

இலங்கையில் தமிழ் மக்கள் தாக்கப்பட்ட பொழுதும் சிங்கள வன்முறை அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டபோதும், தமிழகம் பொங்கியெழுந்ததுண்டு. பேரறிஞர் அண்ணா இவைக்கெதிராக பேரணிகள் நடாத்தியதும், மரினா கடற்கரையில் பிரமாண்டமான ஆட்சேபக் கூட்டங்கள் நடாத்தியதும் இலங்கைத் தமிழர்களுடன் தமது பிணைப்பை வெளிப்படுத்தியதும் முன்வரலாறு.

தமிழர் பிரச்சினையை அணுகும்போது இந்திய மத்திய அரசும் சிறிலங்கா அரசும் தமிழக மக்களின் தமிழீழ மக்களுக்கு ஆதரவான உணர்வுகளை முக்கிய அம்சமாக கருதி வந்ததும் கூட வரலாறு.

தமது தாயகம் என்ற உணர்விலேயே தமிழீழத்தில் சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களும், அடாவடித்தனங்களும், அழிவு நடவடிக்கைகளும் அதிகரித்த போது தமிழீழ மக்கள் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர்.

1992 ஜனவரி மாத ஆரம்பத்தில் 210872 தமிழீழ மக்கள் அகதிகளாகச் சென்றிருந்தனர் இவர்களில் 110782 பேர் 192 அகதி முகாம்களில் தங்கியிருந்தனர். இந்த முகாம்கள் தமிழ்நாட்டின் 18 மாவட்டங்களில் அமைக்கப்பட்டு தமிழக அரசினால் நிர்வகிக்கப்பட்டவையாகும்.

மிகுதி ஒரு லட்சம் பேரும் 1983 ஜூலை கலவரத்தின் பின் படிப்படியாக தமிழகம் சென்று தனியாக வாழ்ந்து வந்தவர்கள். இவர்கள இந்திய அரசிடமோ தமிழக அரசினதோ நிதி உதவியில் தங்கியிருக்கவில்லை. மாறாக, தமது உறவினர்களும் நண்பர்களும் பல நாடுகளிலிருந்து அனுப்பும் உதவிகளில் வாழ்க்கை நடாத்தியவர்கள் இந்திய அரசுக்கு இவர்களால் வெளிநாட்டுச் செலாவணி சேர்ந்து கொண்டிருந்தது.

## ஜெயலலிதாவின் நிலை

இந்த அகதிகள் நிலைமை பற்றி தற்போதைய தமிழக முதலமைச்சர் பதவிக்கு முன்னர் 1991 ஏப்ரல் வரை, அங்குள்ள அகதிகளுக்கு ஆதரவாகவே பேசினார்.

''சிறிலங்காவில் இனப்படுகொலைகள் தொடர்கின்ற வரையிலும், தமிழ் இளைஞர்கள் சுற்றி வளைக்கப்பட்டு கொலைப்படும் வரையிலும் அகதிகள் இந்தியாவுக்குள் குவிந்து கொண்டுதான் இருப்பார்கள். அவர்களை நாம் திருப்பியனுப்ப முடியாது. அவர்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் அளிக்கவேண்டியது எமது கடமை'' என்று செல்வி ஜெயலலிதா கூறினார்.

அதுமட்டுமல்ல தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழீழ மக்களின் காப்பரண் என்றும் பல முறை கூறியுள்ளார்.

1991 மே 21 ஆம் திகதி சிறி பெரும் புதூரில் ராஜிவ் காந்தி கொலை செய்யப்பட்ட உடனேயே தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தமிழ் நாட்டிலுள்ள அகதிகள் எல்லோருமே திருப்பியனுப்பப்பட வேண்டும் எனக் குரல் கொடுத்தார்.

இதைத் தொடர்ந்து. இந்திராகாங்கிரஸ் கட்சியின் தமிழக கூட்டாளிக் கட்சியான அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வின் பொதுச் செயலாளரான செல்வி ஜெயலலிதாவும் இந்தக் கருத்தை எதிரொலித்தார்,

எல்லா இலங்கைத் தமிழர்களும் உடனடியாக திருப்பியனுப்பப்பட வேண்டுமென மத்திய அரசைத் தாம் வற்புறுத்துவதாக அவர் தெரிவித்தார்,

ஜூன் 1991 இல் முதலமைச்சர் பதவியேற்றதும் செல்வி ஜெயலலிதாவின் அணுகுமுறை மேலும் இறுக்கமாக மாறியது. தீவிரவாதிகளின் வளர்விடமாக அகதிமுகாம்கள் இருப்பதால் எல்லா அகதிகளும் திருப்பியனுப்பப்படவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அந்தமான் நிக்கோபார் தீவுகளின் ஒரு தீவுக்காவது தமிழகத்தில் உள்ள அகதிகள் மாற்றப்பட வேண்டுமெனக் கூட செல்வி ஜெயலலிதா கோரினார்.

## அமரர் எம். ஜி ஆர், நிலை

இவையெல்லாம் அ இ அ. தி மு. க வின் தாபகரும் பத்துவருடம் தமிழகத்தின் முதல்வராக இருந்த புரட்சித் தலைவர் எம். ஜி ஆர் அவர்கள் தமிழீழப் பிரச்சினை தொடர்பாக பின்பற்றிய கொள்கைகளுக்கு நேரடி எதிராகவும், முரண்பாடாகவும் இருந்தது

விடுதலைப் போராட்ட இயக்கங்களில் விடுதலைப் புலிகளை தேர்ந்தெடுத்து ஆதரவு வழங்கியது மட்டுமல்ல இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென தமது கடைசி காலத்திலும் விரும்பியவர் எம் ஜி ஆர் அந்தயுத்தம் ஆரம்பித்த பின்பு வைத்திய சிகிச்சை முடித்துக் கொண்டு தமிழகம் திரும்பியதும் அமரர் எம் ஜி ஆர் விடுத்த முதற் கோரிக்கை யுத்த நிறுத்தத்துக்கானதாகும்.

(நாளை தொடரும்)

## கேர்ணல் கடாபி மறுப்பு

# சந்தேக நபர்களை ஒப்படைக்க முடியாது

அமெரிக்க பயணிகள் விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்த்ததாகச் சந்தேகிக்கப்படும் மூன்று லிபியர்களையும் மேற்கு நாட்டவர்களின் கண்காணிப்பில் ஒப்படைக்க முடியாது.

இவ்வாறு லிபியா அதிபர் கேர்ணல் கடாபி தெரிவித்திருக்கிறார் மூன்று லிபியர்களையும் ஐக்கிய நாடுகள் சபை ஆலோசகர்களின் கண்காணிப்பில் வைத்திருக்கலாம் என கெய்ரோ சென்றிருந்த லிபிய வெளியுறவுத் துறை அமைச்சரிடம் தெரிவித்த ஆலோசனையையிட்டே கடாபி நேற்று இவ்வாறு தெரிவித்தார்,

இவர்களை வேறு நபர்களிடம் ஒப்படைப்பதற்கோ அல்லது ஐ. நா, அதிகாரிகளுடன் உடன்படிக்கை காணுவதற்கோ கூட தமக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்த கடாபி, இன்னும் மூன்று மாதத்தில் இவர்கள் பற்றி நடத்தப்படும் கருத்துக் கணிப்பின்பின்னரே நடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

(முன்வந்த செய்தி உள்ளே)

# இரசாயனப் பொருள்களால் சூழல் மாசடைகிறது

இரசாயனப் பொருள்களினால் சுற்றுப்புறச் சூழல் மாசடைகிறது நன்னீர் உப்பு நீராகமாறுவதற்கும் கோடை காலங்களில் இயற்கை சீற்ற மடைவதற்கும் இது ஒரு காரணமாக அமைகிறதாக தமிழகப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஒருவர் கூறியுள்ளார்.

புதிய தொழில் நுட்பங்களை ஊக்குவிப்பதனாலும் உயிரியல் அடிப்படையிலான தொழில் நுட்ப அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதனாலும் சூழல் மாசடைவதைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனதுணை வேந்தர் தெரிவித்துள்ளார்,

## ஐ. நாவில் ஈராக் குழு

# பொருளாதாரத் தடையை நீக்க முயற்சி

ஈராக்கிலிருந்து உயர் மட்டக் குழுவொன்று ஐ. நா. செல்லவிருக்கிறதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களில் ஐ. நா.வுக்குச்சென்ற குழுக்களில் இதுவே உயர் தகைமை கொண்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஐ: நா. விதித்த போர் நிறுத்தவிதிகளை ஈராக் எந்த அளவில் கடைப்பிடித்தது என்பதுபற்றி இவர்கள் பேச்சு வார்த்தை நடத்துவர்.

அதிபயங்கர ஆயுதங்களை அழிப்பதற்கு ஈராக் இணங்கியிருப்பதனால் ஈராக் மீதான பொருளாதாரத் தடையைத் தளர்த்துமாறு இக்குழு கோரிக்கை விடுக்கும் என்றும் இதனை மேற்குலக நாட்டுப் பிரதிநிகள் ஏற்கமாட்டார்கள் எனவும் பி. பி. ஸி, நிருபர் தெரிவித்தார்.

# பெப்ரவரி மாதச் சம்பளம் இன்னும் கிடைக்கவில்லை

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவிலுள்ள பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு இதுவரை பெப்ரவரி மாதத்திற்கான சம்பளம் வழங்கப்படவில்லை என அங்குள்ள ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி கிடைக்கவேண்டிய இச் சம்பளம் பெப்ரவரி மாதம் முடிந்தும் கிடைக்காதது கவலைக்குரிய தென்றும் ஏனைய கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கின்றனர். 18

**இரண்டு ..**

இதன்படி ஜனவரியில் 185 பேரும் பெப்ரவரியில் 96 பேரும் வைத்தியசாலையில் மரணமாகியுள்ளனர். 07)

**மூன்றாம்...**

கொண்டால் அப்பிரச்சினையில் தலையிடுவதை மேற்குலகம் தவிர்த்து வருகிறது எனக் குற்றஞ்சாட்டினார்.

எனவே இந்நிலையில் தமிழர் தமது பிரச்சினையைத் தாமே தீர்த்துக் கொள்ளும் உறுதியை பெற்றுக்கொள்ள வேண்டும் வெளி உலக உதவியை எதிர் பார்த்துக் காத்திருக்கக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

## வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க அறிவித்தல்

மேற்படி எமது சங்கத்தின் ஓராண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 7 பேர் கொண்ட விலகும் முறையிலான இரண்டு நாள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடாத்த இருப்பதால் சகல கழகங்களும் எதிர்வரும்

10 - 03 - 92 காலை 10 மணிக்கு முன்னர்

விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கான பதிவுக் கட்டணம்

ரூபா. 100/ மட்டுமே

தலைவர்

செல்லையா உருத்திரா

03008

# காங்கேசன்துறை போக்குவரத்து செஞ்சிலுவை பலாலிமுகாமில் பேச்சு

காங்கேசன்துறை துறைமுகம் பாவனைக்கு திறந்துவிடப்படுவது தொடர்பாக யாழ்சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உயரதிகாரி ஒருவர் பலாலி இராணுவ முகாமில் இராணுவ உயரதிகாரிகளுடன் பேச்சு நடத்திவிட்டு கொழும்பு சென்றுள்ளார்.

தற்போது சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் குழுவினர் பலாலியில் தங்கியிருப்பதாகவும் மேற்படி துறைமுகத்துக்கு லொறிகள் செல்லும் பிரதான வீதிகளில் இராணுவத்தால் வைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றுவது இங்கிருந்து செல்லும் ஊழியர்களுக்கான பாதுகாப்பு என்பன தற்சமயம் ஆராயப்பட்டு வருவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்களிருந்து தெரியவந்தது. 47

## அசர்பைஜான் - ஆர்மேனியா மோதல்

# 360 ஆம் படைப் பிரிவு அசர்பைஜானில் இருந்து வாபஸ்

அசர்பைஜான் பகுதியிலிருந்து போராடிவரும் சோவியத் நாடுகளின் புதியபொமன் வெல்த்படைப்பிரிவின் 360 - றெஜிமென்ட் அணி அப்பகுதியிலிருந்து வாபஸ் பெற முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அசர்பைஜான் - ஆர்மேனிய மோதலில் கடந்த இருவாரங்களில் அசர்பைஜானின் கடும் தாக்குதலுக்கு பல நூற்றுக்கணக்கான துருப்புகள் பலியாகியதைத் தெரிந்ததே 360 றெஜிமென்ட் வாபஸ் பெறப்படத் தீர்மானித்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை அசர்பைஜான் தலைநகரைப் பிடித்த ஆர்மேனியப்படையினர் கொடுமைகளையும் அழிப்புகளையும் செய்கின்றனர் என்று அங்கிருந்து தப்பிவரும் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இப்படைப் பிரிவினர் விலகுவதை ஆர்மேனியர்கள் விரும்பாத அதேவேளை அசர்பைஜானை எதிர்த்து மிக மூர்க்கத்தனமாகப் போரிட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**பச்சைக்குடா நடவடிக்கை**

குச்சவெளியில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்துள்ள படையினர் அங்கு ஒபரேஷன் 'கிறீன்பே' என்ற இராணுவ நடவடிக்கையைமேற்கொண்டு வருவதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது

**ஷெல் வீச்சு**

கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதனைவிட குண்டு வீச்சு விமானங்கள் பல குடிமனைகளை நோக்கி குண்டு வீச்சு தாக்குதலை மேற்கொண்டதனால் பல வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது, 47

**பாலஸ்தீனியர்...**

களில் தன்னாட்சி உரிமை வழங்குவதற்கு இஸ்ரேலால் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனை கபளீகர நோக்கம் கொண்டது என்று பாலஸ்தீனியர்களும், பாலஸ்தீனியர்கள் சமர்ப்பித்த யோசனை தனியாக ஆட்சி செய்யும் அதிகாரத்தை பாலஸ்தீனியர்கள் கோருகிறதாக இருப்பதனால் அதனை ஏற்கமுடியாது என்று இஸ்ரேலியர்களும் நிராகரித்துள்ளனராக பி. பி. ஸி தெரிவித்தது

**வட, கிழக்குப்**

வழங்க அரசு முடிவு செய்திருப்பதாகவும் குறிப்பிட்டார். நிறுவப்படவிருக்கும் 200 ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும், கிராமங்களில் அமையவுள்ள தனியார் நிறுவனங்களிலும், அரசாங்க வெற்றிடங்கள் நிரப்பப்படுவதிலும் இக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றும் சொன்னார்

1988-1989 காலப் பகுதியில் ஜே. வி. பி. யினரின் கை ஓங்கியிருந்த நேரத்தில் ஆயுதபாணிகளால் கொல்லப்பட்டவர்களையே ஜனநாயக மீட்புக்காக தியாகம் செய்தவர்கள் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார் என்பதும், ஜே வி. பி யை அடக்கும் முயற்சியில் அரசபடையினர் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைக் கொன்றிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொலிஸாரை எதிர்த்து ஸ்ரீநகரில் ஆர்ப்பாட்டம்

ஜம்மு - காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் பொலிசாரின் நடத்தையை எதிர்த்து பெண்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நேற்று முன்தினம் இரவு வீடுகளில் புகுந்து சோதனை நடத்திய பொலிசார் தம்முடன் கண்ணியக் குறைவாக நடந்தனர் என்றும் தமது வீடுகளை அலங்கோலப்படுத்தி சேதப்படுத்தினர் என்றும் பெண்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

முஸ்லிம் தீவிரவாதத் தலைவர் ஒருவரைத் தேடுகையிலேயே இவ்வாறு நடந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனிச் சிங்கள சுற்றுநிருபங்கள்

யாழ் மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சினால் அனுப்பப்படும் சகல சுற்று நிருபங்களும் தனிச் சிங்களத்திலேயே அமைந்துள்ளன,

பொருள் கொள்வனவு, 1992 மாணவர் உணவு முத்திரை, வேலைத்திட்ட அமுலாக்கல், கூட்டுறவுச் சங்க நிலைமைகள் சேகரித்தல், போன்ற சுற்று நிருபங்களே தனிச் சிங்களத்திலே வந்துள்ளவையாகும்.

முகவரி உட்பட அனைத்தும் தமிழிலோ ஆங்கிலத்திலோ காணப்படவில்லை. (46

# சோவியத் குடியரசுகளிடம் சீனா யுத்த விமானம் வாங்குகிறது

முன்னாள் சோவியத் யூனியனின் குடியரசுகளின் பொது நல அமைப்பிடமிருந்து 24 யுத்தவிமானங்களை சீனா வாங்கவுள்ளது.

அண்மையில் சீனாவிற்கு விஜயம் செய்த குடியரசுகளின் பொது அமைப்பின் இராணுவ உயர் அதிகாரி ஒருவருடன் இதற்கான ஒப்பந்தத்தை சீனா கைச்சாத்திட்டிருந்தது.

**துடுப்பாட்டக்காரர்...**

டுள்ளார், அவரின் சராசரி ஓட்டக்குவிப்பு 175 இரண்டாவது இடத்தை மேற்கிந்திய அணியின் ஹெயின்ஸ் பெற்றுள்ளார் இவரின் சராசரி ஓட்டங்கள் 131.

விக்கெட் காப்பாளர்களில் திறமையானவராக இங்கிலாந்து அணியின் ரஸ்ஸல் முன்னணியில் உள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது

## பயணிகள் குறைவு

வவுனியாவில் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதால் யாழ்தேவி ரயில் பயணிகள் குறைவாகவே பயணம் செய்வதாக தெரிவிக்கப்படுகிறது

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பலர் ஓமந்தை இளிநொச்சிப் பகுதிகளில் தங்கியிருப்பதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர். 06 12

**சிப்பாய்களின்...**

தற்போது மீட்கப்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் 20க்கும் அதிகமான படையினர் பலியானமை தெரிந்ததே.

## இதய அஞ்சலி

### சத்தியநாதன் கதீஸ்வரன்

இறுதி வரை எம்முடன் பணிபுரிந்து நேற்று (02 03 92) கைதடியில் ஏற்பட்ட திடீர் விபத்தில் இன்னுயிர் ஈந்த மாணவர் இயக்கத்தைச்சேர்ந்த செல்வன் சத்தியநாதன் கதீஸ்வரன் (கைதடி வடக்கு, கைதடி) அவர்கட்கு எம் இதய அஞ்சலிகள்.

விடுதலைப்புலிகள்
மாணவர் இயக்கம்

03010

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 03-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது